கோயில்கள்

* 344 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மல சமுத்திரம் கீழ்முகம் கிராமத்திற்குச் சார்ந்த காளிப்பட்டி கந்தசாமி கோவில் 1932-ம் ஆண்டிலேயே ஒரு பொதுக் கோவில் (Public Temple) என்று இருந்தும் அறநிலைய பாதுகாப்புச் சட்டத்தின்படி தேவஸ்தான இலாக்கா எடுத்துக் கொள்ளாததற்கு காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sri Kandaswami temple, Kalipatti, is a temple included in the list of temples published under section 46 of the Hindu Religious and Charitable Endowments Act, 1959, and as such it is under the control of the Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras.

திரு. வி. ஆர். பெரியண்ணன்: இந்தக் கோவிலிஞல் ஒரு குடும்பத்தில் அண்ணன் தம்பிக்குள்ளே தகராறு ஏற்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தகராறு ஏதாவது வந்தால் அறநிலையப் பாதுகாப்புத் துறை இதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

திரு. வி. ஆர். பெரியண்ணன்: தலைவர் அவர்களே, இந்தக் கோவிலில் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. இந்த வருமானம் பூராவையும் பூஜைக்காக என்று சொல்லி அவர்களே வைத்துக்கொள்ளுகிருர்கள். அதனல் பொது மக்களுக்குத் தண்ணீர் போன்ற வசதிகள் செய்யப்படுவதில்லை. இதைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது அறநிலையப் பாதுகாப்புத் துறையின் மேற்பார்வையில் இருக்கிறது என்று சொன்னேன். அவர்களே அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள்

* 345 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலுகா குரங்கணி ஸ்ரீ மகாமுத்தாரம்மன் கோவில் ஸ்கீம் பிரகாரம் அக்கோவிலின் டிரஸ்டிகள் எத்தனை பேர்?

(இ) அவர்கள் எவ்விதம் நியமிக்கப்படுகின்றனர்?

(உ) தற்போது அக்கோவிலில் இந்த ஸ்கீமை மீறி டிரஸ்டிகள் யாரேனும் நியமிக்கப்பட்டிருக்கிருர்களா?

(எ) ஆமெனில் அதற்கான காரணமென்ன?